[1979 நவம்பர் 9

(4) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 55/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1979) நிறைவேற்றப்பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(5) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 56/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

---

* 1979, அக்டோபர் 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1979 நவம்பர் 9]

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 நிறைவேற்றப் பெற வேண்டும்" என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(6) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1979) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, "ஊராட்சிகள் (மூன்றாவது திருத்தச்) சட்டமுன்வடிவு 1979 நிறைவேற்றப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

---

* 1979, அக்டோபர் 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்